(b) if so, the steps taken by the Government to disburse the same?

ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம்

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு நடத்தும் தொகுதி IV பணித்தேர்வுக்கு அரிசன மாணவர்களையும், பழங்குடி மாணவர் களையும் ஆயத்தம் செய்வதற்குப் பயிற்சியளிக்கும் பல்வேறு நிலையங்களில் நிய மிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு இதுவரை ஊதியம் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதை வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, இந்த வகுப்பானது 2-7-1973 அன்று துவங்கப்பட்டு 1-12-1973 அன்று முடிவடைந்தது. ஆனால் அந்த நாட் கள்வரை ஊதியம் வழங்கப்படவில்லை. பின்பு, ஒரு மாதத்திற்குப் பிறகு வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், அவர்களுக்கு ஊதியம் கேட்டு நான் சென்ற கூட்டத் தொடரிலே, 21-1-1974 அன்று பிரச்சினையை எழுப்பியபோது மாண்புமிகு அமைச்சரவர்கள், அவர்களுக்குக் கொடுக்காதது தெரியாதென்று கூறினார்கள். அவர்களுக்குச் சம்பளம் இப்போதாவது பட்டுவாடா செய்யப் பட்டுவிட்டதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, அதைத்தான் இப்போதும் சொல்கிறேன். ஒழுங்காக பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

Iron Ore

* 328 *Q.*—Thiru M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether soil samples containing iron ore collected near Thiruvannamalai, have been sent to Japan for test; and

(*b*) if so, the result of the test?